**நானாட்டான் பிரதேச சபை**

---------------------------------

**மன்னார் மாவட்டம்**

-----------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

--------------------

**1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

---------------------------------------------

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 27 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்ரம்பர் 11 இல் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து நானாட்டன் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-------------------------------------------------------

**1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

-----------------------------------

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடு**

------------------------------

மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி ரூபா 368,333 வருமானமாக கிடைக்கப் பெற்ற போதிலும் வருமான செலவு கணக்கில் ரூபா 561,973 ஆக காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான செலவிலும் கூடிய வருமானம் ரூபா 193,630 ஆல் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**1.3.3 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை**

----------------------------------------------------

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

----------------------------------------------------------------

ரூபா 146.05 மில்லியன் கூட்டுமொத்தமான இரு கொடுக்கல் வாங்கல்களை காணி உறுதிகள், கடன்களின் வயதெல்லை அட்டவணை என்பன கிடைக்கப் பெறாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.5 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| | நிதி ஒழுங்கு விதி 571 | 691,029 | 38 காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் கடந்த 03 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான எவ்வித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | |
| (i) | 2017 ஏப்ரல் 19 இன் 30/2017 ஆம் இலக்கம் | | கைவிரலடையாள பதிவு இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் அரச அலுவலர்களது நாளாந்த உள்வருகை<br><br>மற்றும் வெளிச் செல்லுகையை குறித்து உறுதிப்படுத்துவது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்விற்குக் கிடைத்திருக்கவில்லை. |
| (ii) | 2008 பெப்ரவரி 06 இன் 2008/05 ஆம் இலக்கம் | | பொதுமக்கள் பட்டயமானது தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 8,119,549 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 2,939,055 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 411,000 | - | 472,910 | - | 460,000 | - | 366,462 | - |
| (ii) | வாடகைகள் | 6,352,055 | - | 5,866,244 | - | 6,095,995 | - | 7,833,168 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 670,000 | - | 575,769 | - | 620,000 | - | 724,964 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,004,484 | - | 4,840,218 | 3,440,396 | 3,768,250 | - | 5,457,211 | 2,849,064 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 528,000 தொகையான நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் ரூபா 946,470 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

### 2.2.3 வாடகைகள்

சபைக்குரித்தான சந்தைக்கடை, தபால் கட்டட குத்தகைதாரரிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 245,560 நிலுவையினை அறவீடு செய்ய கடந்த 01 தொடக்கம் 07 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைவதற்குத் தவறியமை

தேக்கம் என்னும் இடத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை – 2015 திட்டத்தின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 5 மில்லியன் கிரயத்தில் தேக்கம் சுற்றுலாமைய உணவு விடுதியானது நிர்மாணிக்கப்பட்டிருந்த கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சபையின் குப்பைகள் சேகரிக்கப்படும் இடங்களிற்கு கொண்டு வரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(vi) கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(vii) திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்குட்படுத்தாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக்கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்பட்டிருந்தன.

(viii) திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக இடைக்கால சட்டமொன்று இயற்றப்பட்டிருக்கவில்லை.

(ix) சபையினால் கழிவு முகாமைத்துவத்திற்காக செலவாகும் கிரயத்தினை திரட்டிக்கொள்வதற்காக குப்பைவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(x) சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள கடைகள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தி உறைகளில் இட்டு எடுத்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் சபை நிதியின் மூலம் கூட்டுமொத்தம் ரூபா 76 மில்லியன் பெறுமதியான மதிப்பீடு கொண்ட 16 மூலதன மற்றும் நலனோன்புத் திட்டங்களைச் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நாளதுவரை அத்தகைய திட்டங்களினை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலம் 421 புதிய வீடுகள் மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் சபையின் வருமான பரிசோதகர்கள் அவற்றினை உரியவாறு பரிசீலிக்கத் தவறியிருந்தமையினால் 289 வீடுகளிற்காக அறவிடப்பட வேண்டியிருந்த செயன்முறை மற்றும் பரிசீலனைக் கட்டணங்களின் கூட்டுமொத்தமான ரூபா 606,900 இனை உரியவாறு அறவிட்டுக் கொள்வதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) சபைக்குரியதான முருங்கன் சந்தைக்கடைத் தொகுதியிலுள்ள 32 கடைகளில் 20 கடைகளின் வாடகை ஒப்பந்தக்காரர்களால் கடை வாடகை உடன்படிக்கைக்கு முரணாக மின்சாரப் பட்டியல் ஒழுங்காக செலுத்தத் தவறியமையால் 12 கடைகளிற்கான மின்மானியானது இலங்கை மின்சார சபையினால் அகற்றப்பட்டும் 08 கடைகளிற்கான மின்சார இணைப்பானது துண்டிக்கப்பட்டும் காணப்பட்டன.

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் சபையினது 06 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்கக்கூடிய வேலைகள் பாதிப்படைந்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்குப் பரிசோதனைகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கணக்காய்வுக்குக் கிடைத்திருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டுக்கும் உண்மைக்குமிடையிலான செலவின வேறுபாடு ரூபா 806,452 ஆல் சாதகமாகக் காணப்படுகின்றது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமானங்கள் | ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து ஆதன வரி அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பெறவேண்டிய கணக்குகள் | சபைக்கு வருமதியாகவுள்ள அரசிறை மற்றும் செயன்முறைக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கான வருமான பரிசோதனைகளை உச்ச அளவில் மேற்கொள்ளத் தவறியமை. |
| (இ) | சொத்துக்கள் | சபைக்கு சொந்தமான காணி கட்டடங்கள் வீதிகள், சேமக்காலைகள் மற்றும் விலங்கு அறுமனைகள் போன்றவற்றின் உரிமைப் பத்திரங்களை ஆவணப்படுத்தத் தவறியமை. |
| (ஈ) | கணக்கீடு | பொதுப் பேரேடு மற்றும் பிரதான பேரேடுகளை நாளது வரைப்படுத்தி பராமரிக்கத்தவறியமை. |